ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள், சென்னை-5

முன்னிலை: திரு.க.பார்த்திபன், BSc.

ந.க.எண் இ6/6539/2023 நாள் 19.05.2023

பொருள்: பணியாளர் தொகுதி–ஆதிதிராவிடர் நலம் – செங்கல்பட்டு மாவட்டம் – பல்லாவரம் வட்டம் – நாகல்கேணி – அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் – திரு.செ.அண்ணாதுரை என்பவரது பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – சார்பு

பார்வை:
1. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.தே1/444/022 நாள்.01.03.2022
2. அரசாணை நிலை எண்.33 பணியாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள்.06.03.2023.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

******

ஆணை:-

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் கோவையாக்கம் கிராமத்தை சார்ந்த திரு.இராமச்சந்திரன் என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு 19.09.2020 அன்று காலமானதால் வன்கொடுமை தடுப்பு சட்டம் திருத்த விதிகள் 2016–ன் கீழ் தனியரது சகோதரர் திரு.செ.அண்ணாதுரை என்பவருக்கு பார்வை 1ல் காணும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூலம் ஆதிதிராவிடர் நல துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வட்டம் நாகல்கேணி அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 16.03.2022 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக எந்த வித விதி தளர்வும் தேவையில்லை எனில் பணி நியமன அதிகாரியே சம்மந்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் வன்கொடுமை தடுப்பு சட்டம் 2016–ன் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வட்டம் நாகல்கேணி அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 16.03.2022 பிற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.செ.அண்ணாதுரை என்பவர் அப்பணிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 16.03.2022 பிற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திரு.செ.அண்ணாதுரை இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

பெறுநர்.
திரு.செ.அண்ணாதுரை,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிந நல மேல்நிலைப்பள்ளி,
நாகல்கேணி,
செங்கல்பட்டு மாவட்டம்.